பதிவு அஞ்சல் மூலம்

123

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.பா. கணேசன், இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்புஇயக்குநர்,
கோயம்பேடு,
சென்னை - 600 107.

பெறுநர்
துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண்.14182/2020/TCP-4, நாள்:18.02.2021.

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை- 107 - ஈரோடு மாவட்டம் - சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி - சிவகிரி கிராமம் - ரி.ச.எண்.575/4-ல் 3.84 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி / இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து

பார்வை:
1. மனுதாரர் திரு.K.C.பழனிச்சாமி, ஈரோடு கடிதம், நாள்.23.11.2020.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம். ந.க.எண்.1234/2020/ஈமா3, நாள்.25.09.2020 மற்றும் 28.11.2020.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம், ந.க.எண்.14182/2020/TCP4, நாள்.10.11.2020 மற்றும் 18.12.2020 ஒப்புதலளிக்கப்பட்டது.
4. செயல் அலுவலர் / சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.528/2020, நாள்.03.02.2021.
5. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40483/1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2007/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.2201/2017/சிபி, நாள்.28.09.2017.
9. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
10. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
11. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
12. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைUD4(3), நாள்.23.09.2020.
13. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017.
14. மனுதாரர் திருமதி.T.சரஸ்வதி மற்றும் 2 பேர் அவர்களின் விண்ணப்பம் நாள், இல்லை.

- - - - -

பார்வை 1, 2 மற்றும் 14-ல் கூட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் கூட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.10.11.2020 மற்றும் 18.12.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் கூட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, தானப்பத்திரம் எண்.64/2021, 11.01.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>இணைப்பு:</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(4 தொகுப்பு)

(ஒம்/-) பா. கணேசன்,
நகர்ஊரமைப்பு இயக்குநர்

<u>நகல்:</u>

1. செயல் அலுவலர்,
சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம் (பத்தி ஒன்று மட்டும்)

2. மனுதாரர்
திரு. K.C.பழனிச்சாமி,
198 C, முல்லை அரசன்பட்டி,
சக்தி நகல், கிழக்கு,
திண்டல், ஈரோடு மாவட்டம் - 638 012. (பத்தி ஒன்று மட்டும்)

3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18/2/21
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்

18/2/2021

பூ.மு

**சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி.து.கோமதி**

**ந.க.எண்.528/2020** **நாள்: 09.06.2021**

பொருள் : மனைப்பிரிவு – ஈரோடு மாவட்டம் – சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி – சிவகிரி "ஆ" கிராமம் – ரீ.ச.எண்.575/4–இல் அமைந்துள்ள 3.84 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு – நகர் ஊரமைப்பு இயக்குநரால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது – மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1)மனுதாரர் திரு.கே.சி.பழனிச்சாமி, ஈரோடு கடிதம் நாள்.23.11.2020.
2)மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் ந.க.எண்.1234/2020/ஈமா3 நாள்.25.09.2020 மற்றும் 28.11.2020.
3)நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.14182/2020/TCP–4 நாள்.10.11.2020 மற்றும் 18.12.2020இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
4)இவ்வலுவலக கடித ந.க.எண்.528/2020 நாள்.03.02.2021.
5)நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/1990/எல்ஏ1 நாள்.07.11.1992.
6)நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012/எல்ஏ2 நாள்.19.04.2012.
7)நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/எல்ஏ1 நாள்.08.09.2017.
8)நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2201/2017/சிபி நாள்.28.09.2017.
9)அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.06.2004.
10)அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்.04.05.2017.
11)அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நநி. (ஐ) துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
12)அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்.23.09.2020.
13)அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.30.08.2017.
14)சிவகிரி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.64/2021 நாள்.11.01.2021.
15)இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.1/2021 நாள்.20.01.2021.
16)இவ்வலுவலக ந.க.எண்.528/2020 நாள்.03.02.2021.
17)நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.14182/2020/TCP–4 நாள்.08.02.2021.
18)நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1234/2020/ஈமா–3 நாள்.27.02.2021.
19)இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.60/2021 நாள்.10.05.2021.

---

**உத்திரவு:-**

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சிக்குட்பட்ட சிவகிரி "ஆ"கிராமம் ரீ.ச.எண்.575/4இல் 3.84 ஏக்கர் (15539.92 சதுர மீட்டர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை 17 இல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் ம.வ/ந.ஊ.இ எண்.23/2021 என எண்ணிட்டு நாள்.18.02.2021–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவிற்கு பார்வை 19 இல் காணும் இப்பேரூராட்சி மன்றத்தின்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

kc Palani

129.



எனவே நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அங்கீகார நிபந்தனைகளுக்குட்பட்டும், இப்பேரூராட்சி மன்ற தீர்மான அங்கீகாரத்தின் அடிப்படையிலும், ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், சிவகிரி (தேர்வுநிலை) பேரூராட்சி, சிவகிரி "ஆ" கிராமம், ரீ.ச.எண்.575/4–இல் அமைந்துள்ள 3.84 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பூமியை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய அதன் உரிமையாளர் திரு.கே.சி.பழனிச்சாமி, 198 சி, முல்லை அவென்யூ, சக்தி நகர், கிழக்கு, திண்டல், ஈரோடு என்பவருக்கு 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்ட விதிகளின்படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

<u>தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 3.84 ஏக்கர் (அ) 15539.92 ச.மீ |
| 2 | ஒதுக்கிய மனைகள் | – | 60 (EWS மனைகள் உட்பட) |
| 3 | மனைப்பிரிவு சாலையின் பரப்பு [மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கியது] | – | 3276.45 ச.மீ. |
| 4 | பூங்கா | – | 1247.04 ச.மீ. (10.16%) |
| 5 | பொது உபயோகம் | – | 68.26 ச.மீ. (0.51%) |
| 6 | மின்பகிர்மானம் (மனுதாரர் மின்வாரியத்திற்கு தானமாக வழங்கியது) | – | 69.72 ச.மீ. (0.52%) |
| 7 | EWS மனைகளின் பரப்பு (பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள்) | – | 1281.38 ச.மீ. (10.44%) |
| 8 | EWS மனைகளின் எண்கள் | – | (9–12, 15–19, 23–27 மற்றும் 45–53) |

<u>நிபந்தனைகள்</u>

1) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019–இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./நஊஇ.எண்.23/2021 என எண்ணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். எல்லை கற்களால் வரையறுக்கப்பட்டுள்ளதை நகர் ஊரமைப்பு துறையிடம் அனுமதி பெறாமல் மாற்றம் செய்யக்கூடாது.

3) மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 175 மற்றும் 179 ன் பிரிவுகளின் படியும் 300(8) பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உப விதிகளின் படி / ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)இன் படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப சரளைக்கற்களைக் கொண்டு நிர்வாக அதிகாரியால் (Executive authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்பட வேண்டும்.

4) நகர் ஊரமைப்பு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனைகளை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.



K.C.Palanisamy

131

5) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்கான தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படும் மனைகளுக்கு 1 மீட்டரும், மற்ற மனைகளுக்கு (Other than EWS Sites) 7 மீட்டர் (23அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5அடியும்), 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும் ) 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 24 மீட்டர் (80அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின் படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ(6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் படி 2.4 மீ ( 8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுகள் திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறந்தவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்துவண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியில் தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

10) கடைக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப் பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

11) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கபட வேண்டும்.

12) மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறவேண்டும்.

13) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

14) மனையின் ஊடே குறைந்த அழுத்த / மின்கம்பி பாதை / அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

..4..

15) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

16) மனுதாரர் சிவகிரி பேரூராட்சி செயல்அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

17) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமம் குறித்து பரிசீலக்கப்படுகிறது. எனவே உண்மையின் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

18) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

19) நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

20) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் (0.6 மீ x 1.2 மீ) அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும்.

21) EWS மனைகள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

22) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய பேரூராட்சி நிர்வாகம் பொருத்தமான அமைப்பு அல்ல.

23) ஏதேனும் வில்லங்க விவகாரம் ஏற்பட்டால் அதற்கு விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பாகும்.

24) கட்டணங்கள் செலுத்தப்பட்டதில் தணிக்கையில் ஏதாவது குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டால், அதை தங்கள் பொறுப்பில் சரிசெய்து கொடுக்கப்பட வேண்டும்.

25) அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை(UD4(3) நாள்.04.05.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

..5..

26) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்.47 (II) இன்படி தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

27) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
சிவகிரி(தேர்வுநிலை)பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

இணைப்பு:-
1)நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை
அவர்களது மனைப்பிரிவு வரைபடம்.
2)மனைப்பிரிவு ம.வ./ந.ஊ. இ.எண்.23/2021 நாள்.18.02.2021
(மனைப்பிரிவு நிபந்தனைகள்)

பெறுதல்:-
திரு.கே.சி.பழனிச்சாமி,
198 சி, முல்லை அவென்யூ,
சக்தி நகர், கிழக்கு,
திண்டல், ஈரோடு

நகல்:-
1)நகர் ஊரமைப்பு இயக்குநர், கோயம்பேடு, சென்னை அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2)நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், ஈரோடு.
3) தனி அலுவலர் மற்றும் பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்கள் ஈரோடு மண்டலம்.
4)சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், சிவகிரி.